நல்லூர் கிளை நூலகம்

# ★ யாழ்ப்பாணம் தாக்கப்பட்டால் 'வான் புலிகள்' தாக்குவர்!

[கொழும்பு]

யாழ்ப்பாணம்மீது இராணுவம் தனது இறுதித் தாக்குதலைத் தொடங்கும் போது விடுதலைப் புலிகள் தமது விமானப்படையான வான் புலி' அமைப்பை அறிமுகம் செய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக ஏ.எவ்.பி. செய்தி தெரிவித்தது.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகள் கடந்த ஆண்டுகளில் பல இராணுவ முகாம்களை தகர்த்து பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றி இருப்பதால் புலிகள் ஆயுதப் பற்றாக்குறையை சந்திக்கத் தேவையில்லையென்று கூறப்படுகின்றது.

ஆயினும்விடுதலைப் புலிகள்,

(6-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 14 இதழ் 82

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27 - 4 - 1995

## அலரி மாளிகையில் அவசர பாதுகாப்பு மாநாடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து நேற்றுமுன்தினம் காலை அவசர மாநாடொன்று அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது.

வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பின் பாதுகாப்பு குறித்து இம் மாநாட்டில் தீவிரமாக ஆராயப்பட்டதுடன் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய இராணுவ நடவடிக்கை குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

முப்படைத் தளபதிகள் பொலிஸ் மா அதிபர் பாது

(5ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதலுக்கு முஸ்தீபு!

## போர்த் தளபாடங்களும் கொள்வனவு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை தம்வசப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினர் இப்பகுதிகளில் பாரிய தாக்குதலை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இதற்காக பெருமளவு போர்த் தளபாடங்களை கொள்வனவு செய்யவும் படையினர் திட்டமிட்டுள்ளதாகவும் 'ஏ. எவ்.பி.' செய்தி தெரிவித்தது.

(6ம் பக்கம் பார்க்க)

## சகல படை முகாம்களிற்கும் மேலதிக துருப்புக்கள் விரைவு

(கொழும்பு)

வடக்கி-கிழக்கில் சகலபடை முகாம்களுக்கும் மேலதிக படையினர் அனுப்பப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல படை முகாம்கள் புலிகளின் தாக்குதல்களுக்கிலக்காகலாமென்ற அச்ச நிலை தோன்றியிருப்பதையடுத்தே சகல படை முகாம்களுக்கும் மேலதிக படையினர் அனுப்பப்பட்டு வருகிறார்களாம்.

குறிப்பாக கிழக்கில் பல பகுதிகளிலும் படைமுகாம்களுக்கு பெருமளவு படையினர் அனுப்பப்பட்டுள்ளதுடன் எந்நேர

(6ம் பக்கம் பார்க்க)

## படகு விபத்தில் மேஜர் செந்தமிழ் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட படகு விபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

தமிழீழ நிர்வாகசேவையின் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களின் பொறுப்பாளரான மேஜர் செந்தமிழ் அல்லது ஈசன் (மகாதேவா சந்திரகாந்தன் - அராலி தெற்கு) வீரச்சாவு அடைந்தார்

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். சி

## போர் என்றால் அரசும் அதற்கு தயார்!

### சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் போரை நீடிக்க விரும்பினால் அரசுக்கும் போரை நீடிப்பதை தவிர வேறு வழியில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்காக பாரிஸிற்குச் செல்லமுன் நேற்றுமுன்தினம் ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்:-

விடுதலைப் புலிகளுடன் அமைதி ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் திட்டத்தில் அரசு உறுதியாக உள்ளது. விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்தே நாமும்

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதலை நிறுத்தினால் பேச்சுக்கள் பற்றி ஆராயலாம்

### அமைச்சர் ரத்வத்த

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் படையினர் மீதான தாக்குதலை நிறுத்தி சமரசப்பேச்சு வார்த்தை மூலம் பிரச்னைக்கான தீர்வை காணலாமென்பதனை உறுதிப்படுத்தினால்மீண்டும் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவது குறித்து அரசு ஆராயும்.

இவ்வாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தை கொழும்பு பத்திரிகைஒன்றுக்கு தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவு, சமாதானக்கதவு இன்னமும் மூடப்படவில்லை. சமாதான சூழ்நிலைக்கான முன்முயற்சிகளை அரசே உருவாக்கவேண்டுமென்று வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நம்பிக்

(5ம் பக்கம் பார்க்க)

## வானொலிப் பெட்டிகளுக்கு அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

வானொலிப் பெட்டிகளை வைத்திருப்பவர்களுக்கான உத்தரவுப் பத்திரங்களை வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளை தமிழீழ நிர்வாகச்சேவை மேற்கொண்டுள்ளது.

(5 ம் பக்கம் பார்க்க)

## 25 தமிழ் இளைஞர் தொடர்ந்து விசாரணையில்

(கொழும்பு)

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த 25 தமிழ்இளைஞர்கள் தொடர்ந்தும் குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

வடபகுதியிலிருந்து கொழும்பு வந்ததற்கான சரியான காரணத்தை இவர்கள் தெரிவிக்காததாலும் இவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாலுமே தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பில் தினமும் சுற்றி வளைப்புகளும் தேடுதலும் நடைபெற்றுவருவதாகவும் பெருமளவு தமிழர் தினமும் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஆளுநர் காமினி பொன்சேகா மயிரிழையில் உயிர்தப்பினார்

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகாவும் பல சிரேஷ்ட அதிகாரிகளும் தாக்குதல் சம்பவம் ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியதாக 'ஐலன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் திருமலை நிலாவெளிப் பகுதியில் ஹோட்டல் ஒன்றை பார்வையிடச் சென்று அங்கு தாமதித்ததால் அப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலிலிருந்து இவர்கள் உயிர் தப்பினர் குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்கலந்துரையாடலுக்குச் சென்ற இவர்கள் பின்னர் நிலாவெளி பகுதியில் ஹோட்டல் ஒன்றை

(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


## செல்வம் ஆட்ஸ்

றபர்சீல் வேலை தெரிந்தவர்களும் பழக ஆர்வமுள்ளவர்களும் அச்சுக்கோப்பாளர்களும் உடன் நேரில் வரவும் ''செல்வம் ஆட்ஸ்'' கே. கே. எஸ். வீதி சுன்னுகம்.

(சி-1467)

## 'அதிபராகி'

இந்த வார வீரகேசரியில் பிரசுரமாகியுள்ள 'அதிபராகி' சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில், 50/-

(சி-1466)

## வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

(சி-1464)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1994/95

### புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1995-06-09இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்,

இக் கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளை உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவுசெய்யப்படுவோர் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 25 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவுசெய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர் கல்விக் கிளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1995-06-09ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(எ-4892)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

முழுநேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1994/95

### புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1995-06-09இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளையில் உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் இதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர் கல்விக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1995-06-09ம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(எ-4893)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## கண் சிகிச்சை ஒத்தி வைப்பு

(நெல்லியடி)

மந்திகை மருத்துவ மனையில் எதிர்வரும் 28ம் திகதி நடைபெறவிருந்த கண் வைத்திய சிகிச்சை முகாம் மறு அறிவித்தல் வரை இடம் பெறமாட்டாது என பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு, எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

160-ரி

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ப. நோ.க. கூ. சங்க உற்பத்தி நிலையமும் கிளைக் காரியாலயமும் சங்கத்தலைவர் திரு. வ. இரத்தினசிங்கம் தலைமையில் இன்று காலை 27ம் திகதி மருதனுமடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது, 59

## சாவகச்சேரியில் சோதிடகருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகராண்மைக் கழகத்தினுல் நடாத்தப்பட்டு வரும் மாதாந்த முழு நிலாக் கருத்தரங்கு கடந்த வாரம் நகராண்மைகழக கேட்போர் கூடத்தில் சாவகச்சேரி நகர சபை விசேட ஆணையாளர் திரு, சி. நடராசா தலைமையில் நடைபெற்றது

இக் கருத்தரங்கில் 'மேலைத் தேசத்திற்கு நிகரான எமது சோதிடமும் வானியலும், என்னும் பொருளில் பிரபல சோதிட ஆசான் பிரம்மஸ்ரீசி. சிதம்பர நாதக்குருக்கள் உரை நிகழ்த்திஞர். ரி

## பரீட்சைகள்

(யாழப்பாணம்)

அரச- கூட்டுத்தாபனம் சுருக்கெழுத்தாளா நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை மே மாதம் 6ம் 7ம் திகதிகளில் யாழ்பபாணத்தில் நடைபெறவுள்ளது என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை/ கணக்காளர் சேவை/ வெளிநாட்டு சேவை/ உள்ளூராட்சி திணைக்கள சேவை/ பொது சேவை தரம் 1,11 ற்கான தகுதிகான பரீட்சை மே மாதம் 6ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

வாய்ப்பேச்சு பரீட்சை மே 4ம் 5ம் திகதிகளில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 62-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—04—27**

வியாழன் இரவு

08-02 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்த மருத்துவ குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''உங்களுக்குத் தெரியுமா?'' உரைச்சித்திரம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும்
08.50 எங்களின் தேசம்

**1995—04—28**

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 பணிபாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995—04—27**

வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 பொன்விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி - பதில்- விளையாட்டு தொடர்பானவை
06-25 என் தெரிவு
06-30 மாலை நிகழ்சிகள் யாவும் நிறைவுபெறும்;

# மசூதியை தகர்க்கப் போவதாக எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திலுள்ள சாம்ஷெரிப் மசூதியை முற்றுகையிட்டிருக்கும் இந்திய இராணுவம் தமது முற்றுகையை விலக்கா விட்டால் மசூதியை வெடிகுண்டு வைத்து தகர்க்கப்போவதாக முஸ்லிம் போராளிகள் எச்சரித்துள்ளனர்.

மசூதியின் உள்ளே முஸ்லிம் தீவிரவாதிகள் மறைந்திருப்பதையிட்டு கடந்த 45 நாட்களாக இம்மசூதி இந்திய இராணுவத்தால் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனுல் முஸ்லிம் போராளிகள் அவ்வாறுசெய்யமாட்டார்களென ஹில்புல் முஜாகுதீன் என்னும் போராளி அமைப்பு எச்சரித்துள்ளது. கசி

### கடற்படை சுட்டதால்

# தொழிலை கைவிட்டு மீனவர் கரை திரும்பினர்

(ஆனைப்பந்தி)

தொழிலுக்குச் சென்ற மீனவர்களை நோக்கி கடற்படையினர் சுட்டதால் அம்மீனவர்கள் தொழிலைக் கைவிட்டுக் கரையேறினர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது

நவாலி மயூரன் குடியிருப்பைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் அராலிக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது விசைப்படகுகளில் வந்த கடற்படையினர் இவர்களை நோக்கி சுட்டதனுல் அனைவரும் தமது தொழிலைக் கைவிட்டு கரையேறிவிட்டனர்.

இதன்போது சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் தம்மால் கடலில் கைவிடப்பட்டதாக மீனவர்களில் சிலர் தெரிவித்தனர். 101

# 6நாள் கம்பன் விழா மே 5ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா எதிர்வரும் மே 5 முதல் 10 வரை 6 தினங்கள் நல்லூர் முருகனுலய வடக்கு வீதியிலமைக்கப்படும் விசேட பந்தலில் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் காலை மாலை இருவேளைகளிலும் ஆய்வரங்கு, கருத்தரங்கு. ஐயந்தெளியரங்கு இளைஞர் அரங்கு, கலை தெரியரங்கு, சுழலும் சொற்போர், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், நாடகம், மேன்முறையீட்டுப்பட்டிமண்டபம், கவியரங்கம். இசையரங்கு, இலக்கியஆணைக்குழு. போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

முதல்நாள் மாலை விழாவில் மகர யாழ். விருதுவழங்கல், மூதறிஞர் கௌரவம், கம்பமலர் வெளியீடு, அங்கவீனர்களுக்கான உதவி வழங்குதல் அமரர்கள் வித்துவான் சி ஆறுமுகம், தேவன் யாழ்ப்பாணம், வித்துவான சி; குமாரசாமி ஆகியோர் ஞாபகார்த்தகவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகளிலே பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தங்கப்பதக்கம், ஒரு லட்ச ரூபா என்பவற்றையுள்ளடக்கிய மகர யாழ். விருது இம்முறை யாழ். பல்கலைக்கலைக் கழகத்துணைவேந்தர் க. குணரத்தினத்தால் டாக்டர் து. வி ஜெயகுலராஜாவுக்குவழங்கப்படும.

இம்முறை, மூதறிஞர் கௌரவம் பெறும் அறுவரின் பெயர் விபரம் வருமாறு-

கம்பனடிப்பொடி சா. கணேசன், நினைவுப் பரிசில் மகா வித்துவான் எப். எக். ஸி. நடராசா, கம்பகலாநிதி இரா. இராதாகிருஷ்ணன் நினைவுப் பரிசில் ஆத்மஜோதி நா. முத்தையா, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நினைவுப் பரிசில் பண்டிதர் க. வைத்தீஸ்வரக்குருக்கள், திருகோணமலை கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரம் நினைவுப்பரிசில் ச. வேலுப்பிள்ளை, பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில் ஓவியர் மணியம்.

# பொன்னுடை போர்த்தி கம்பவாரிதிக்கு கௌரவம்

(நெல்லியடி)

உடுப்பிட்டி வல்லை வெளிப் பிள்ளையார் ஆலயத்தில் சுமார் பத்துத்தினங்கள் 'மகா பாரதம்' சொற்பொழிவு செய்த 'கம்பவாரிதி' இ. ஜெயராஜ் பொன்னுடை போர்த்திக கௌரவிக்கப்பட்டார்.

உடுப்பிட்டி சந்தைவீதி இளைஞர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட இவ்வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளை பொன்னுடை போர்த்திஞர். மேற்படி ஆலய பிரதம குருவான மகாகணபதி திருஞானசம்பந்தக்குருக்களும் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (160-ரி)


## சந்தா விநியோகம்

''ஈழநாடு'' பத்திரிகை நாளாந்தம் உங்கள் வீடுகளுக்கு டிலிவரிக்கான கட்டணம் எதுவுமின்றி விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் முதலாம் திகதி முதல் அதிகாலை 6-00 மணிக்கு முன் உங்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
விநியோக முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்டெட். யாழ்ப்பாணம்.

(ஏ-4890)

# விடுதலைப் புலிகளின்றித் தீர்வுகாண முயல்வது மாலையின்றி நடக்கும் திருமணம் போன்றது!

## தொண்டமான் கருத்து

[கொழும்பு]

''விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாமல் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண முயல்வது, மாலைகளின்றி நடக்கும் திருமணம் போன்றே இருக்கும்.'' இவ்வாறு இ. தொ. கா. தலைவரும், கால்நடை அபிவிருத்தி. கிராமியக் கைத்தொழில் அமைச்சருமானதிரு எஸ் தொண்டமான் தெரிவித்தள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு கூறினர்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாதது: இதற்கு முன்பும் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டும் கடைசி நேரத்தில் அவை நிறைவேருது போயின. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பன கடைசிநேரத்திலேயே நிறைவேருது போயின. அதே நிலைமைதான் இப்போதும் உருவாகியுள்ளது.

பேச்சுவார்த்தையின்போது தமிழ் எம். பி.க்களுக்கோ, அமைச்சர்களுக்கோ முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. தமிழ்க் கட்சிகள் யாவும் அரசாங்கத்தை ஆதரிக்கின்றன. ஜனதிபதி இந்த நிலையிலும் சமாதானம் குறித்து உறுதியாக இருப்பது பாராட்டுக்கு உரியது. அது பேச்சளவில் மட்டும் இருந்துவிடக்கூடாது. அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

அரசாங்கம் செய்தது சரி என்று கூறுவதற்கு நான் தயாரில்லை. அவ்வாறு கூறி மக்களது அவப் பெயரைச் சம்பாதிப்பதற்கு நான்விரும்பவில்லை அரசாங்கம் முழுமையான சமாதானத்தை அடைவதற்கு முற்படவில்லை. விடுதலைப் புலிகள் தவறிழைத்தனர் என்று கூறுவதைவிட, அவர்கள் அரசாங்கத்தை நம்பவில்லை என்றே கூறலாம். இதற்குக் காரணம் என்ன? என்று தேடிப் பார்க்கவேண்டும்.

யுத்தம் வரக்கூடாது என்பதே எனது விருப்பம். ஆனல் அதனைத் தடுப்பதற்குப் புலிகளுக்கு ஆலோசனை கூறும் சக்தி என்னிடம் இல்லை. அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பதனுல் அரசுக்கு ஆலோசனை கூறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். ரி

### மணிவாக்கு

காமம், குரோதம், எனப்படும் பகைவர்கள் நிரம்பிய இதயத்தில் மனப்பிணிகளாகிய நிலைமையை அழிக்கப் படிப்பும் அறிவும் போதுமா? ஆண்டவன் துணையின்றி அவற்றை ஒழிப்பது முடியாது.

-தியாகராஜ சுவாமிகள்

## நமது நோக்கு

### மீண்டும் வான் தாக்கு!

பல மாதங்களின் பின்-அரசின் வான்படை தனது கொடுரத்தை ஆரம்பித்துள்ளது.

மன்னரில் - பெண்கள், பாலர்கள் உட்படச் சிலர் உயிரிழந்துள்ளார்கள். வீடுகள் பல சேதமாகியுள்ளன.

மணலாறிலும் இதே போல நடாத்திய குண்டு வீச்சில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

மக்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கப் பட... அமைத்திருக்கிறோம் என்றுதான் அரசு அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்தது.

ஆனல்-நடப்பது என்ன? பொதுமக்கள் கொல்லப் படுகிறார்கள்; சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன,

கூடியளவு சலுகைகளைத் தமிழ் மக்களுக்கு அளித்துள்ளோம எனப் பேசுச் சில நாட்களுக்குள், மக்களுக்கு அளிக்கப்படுபவை எவை என்பதை சர்வ தேச அரங்கு விளங்கிக் கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப் பட்ட நடவடிக்கைகள் என்றுதான் அரசு அடக்கமாகக் கூறிக்கொண்டது.

ஆனல்-அந்த நடவடிக்கைகள், தமிழ் மக்களின் தொகையை படிப்படியாக மட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்தானு எனக் கேள்வி எழுப்புவதில் நியாயம் இருக்கிறது.

போராளிகள் தங்குமிடமென்று சந்தேகப்படும் இடங்களிலே குண்டுவீசித் தாக்குகிறோம் என்றும் காரணம் கூறப்படுகின்றது.

இது- ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயம் அல்ல.

ஏனெனில் - இற்றை வரை நடாத்தப்பட்ட தாக்குதல்களில் பெருமளவு அழிவுகளைச் சந்தித்தது அப்பாவிப் பொது மக்களே.

போராளிகளைத் தாக்கி அழித்துவிட்டாற் போராட்டமே அழிந்துவிடும் என்று அரசு கணக்கிட்டுச் செயற்படத் தொடங்கிவிட்டது?

புறக்கணிப்புகள, இனக் கலவரங்கள், அத்துமீறிய குடியேற்றங்கள், நிலம், கல்வி, மொழி, தொழில் வாய்ப்புப் போன்ற உரிமைகள் பறிக்கப்பட்டமை போன்ற அடிப்படைக் காரணங்களை அணுகாது குண்டு வீசித் தாக்கும் செயல்கள் அரசுக்கு நன்மை தரப்போவதில்லை என்பதை அறுதியிட்டுக் கூறவிரும்புகிறோம்!

## பலதும் பத்தும்

### கலபாஸ்

நைஜீரியாவில்... 'கலபாஸ்' என்ருல் என்ன? கல், மண், அள்ள காய்கறி எடுத்துச் செல்ல இங்கு கடகம், பெட்டி பயன்படுவது வது போல அங்கு பயன் படும் கூடைக்குப் பெயர் கலபாஸ்.

இங்குசுரக்காய் முற்றிய பின்காயவிட்டுச் குடுவையாக்கிப் பயன்படுத்துகிறோமல்லவா? அதேபோலத்தான் அங்கும் சுரக்காய் இனத்தைச் சேர்ந்த காயிலிருந்து இக்குடுவையைச் செய்கிருர்கள். அங்குள்ள காய்கள் தடித்த தோலுடையவை அரைக்கோள வடிவத்தில் இதனைச் செய்கிறார்கள்.

வெப்ப வலய நாடுகளில் இக்காய் செடிகள் மரங்கள் ஆகிய இரு வகையாலும் கிடைக்கும். காய்ந்தபின் நிறந்தீட்டி அழகுபடுத்தியும் பயன்படுத்துகிருர்கள். இங்கு...! ஏனில்லை! அச்சுவேலியில்— பத்தைமேனிப் பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள சில வீடுகளில் இந்த இன மரங்கள் உண்டு. உள்ளூர் உற்பத்திக்கு வழி காட்டும் இத்தகவலைத்தந்துதவிய அச்சுவேலியைச் சேர்ந்த பொறியியலாளர் எஸ். சி; இமானுவேலுக்கு நன்றி!

— மயூரன்

## இராசி பலன்

27-04-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு சித்திரை-14)

திரயோதசி இரவு 9-22 உத்தரட்டாதி மாலை 4-36 வரைசித்தயோகம் இராகு காலம் பகல் 1-29 முதல் 2-59 வரை சுபநேரம் காலை 7-29 முதல் 8-59 வரை பிரதோச விரதம்.

மேடம்: தொழில் தகராறு, அபகீர்த்தி, வீண்விரயம்.

இடபம்: குடும்ப சந்தோஸம் பொதுத்துறை ஈடுபாடு, தியாகம்.

மிதுனம்: வாக்கு வசீகரம், தாயார் புத்திமதி, குடும்ப சுகம்.

கடகம்: உள்ளத்தில் வேதனை தொழில் நஸ்டம், காரியத் தடை.

சிங்கம்: மனத்தாங்கல், பழி வாங்கப்படல், அவசரமுடிவு.

கன்னி: மறக்க முடியாத நிகழ்வு, பணப்புழக்கம், பயண ஒழுங்கு.

துலாம்: தொழில் லாபம், வசதிவாய்ப்பு, இனசன மகிழ்ச்சி,

விருச்சிகம்: அசுபசெய்தி, வாக்குப்பகை. அமைதியின்மை.

தனுசு: பணியாள் தொல்லை தைரியக்குறைவு, மனவெறுப்பு

மகரம்; மேலோர் நட்பு, உறவினர் உதவி, முயற்சி பலிதம்.

கும்பம்: வாக்குவாதம், விரோதிகள் துன்பம், அலைச்சல்.

மீனம்: கடமையுணர்வு, செயல்திறன், தெய்வீக சிந்தனை.

— ஜோஸ்யர்

# கொழும்பு நகரில் கைதாகும் தமிழரிடமிருந்து பணம்பறிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தமிழர்கள், தமது இருப்பிடங்கள் பற்றிய விபரங்களைப் பதிய வேணடும் எனச் சிறிலங்காப் பொலிஸார் அறிவிததுள்ளனர்,

கடந்த ஆட்சிக் காலத்தின் போது இவ்வாறு பொலிஸ் நிலையங்களில் தமிழர்கள் தம்மைப் பதிவு செய்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெள்ளவத்தைப் பகுதியில் கைதான தமிழர்களிடம் பணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறு முதல் பொலிஸார் குறைந்தபட்சம் ஆயிரம் தமிழர்களைக் கொழும்பில் தினமும் கைதுசெய்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்ட தமிழர்களிடம் இருந்து பெரும் தொகையான பணம் அறவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. ரி

# அரசின் அனுமதியின்றி வெளிநாடு செல்ல இலங்கையருக்குத் தடை

[கொழும்பு]

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோர், அரசின் அனுமதியின்றிச் செல்லக் கூடாது என்ற சட்டத்தை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இச்சட்டத்தின் படிவெளிநாடுகளில் வேலை வாய்ப்புத் தேடிச் செல்பவர்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலம் மட்டுமே செல்ல முடியும். மேலும் இதற்காக 3,200 ரூபாயிலிருந்து 10 200 ரூபா வரை இவர்கள் முன்காப்புத் தொகையாகச் செலுத்த வேண்டியுள்ளது

வேலை தேடிச் சென்லும் இலங்கையர்கள் வெளிநாட்டில் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு நஷ்டஈட்டுத் தொகையாக 50,000 ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

# காமினி கொல்லப்பட்ட அன்று புலிகளுக்கு ஆயுதங்கள் வந்தன

[கொழும்பு]

காமினி திஸநாயக்கா உட்பட 50 பேர் கிருண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப் பட்ட அன்றைய தினம் விடுதலைப்புலிகளுக்கு பெருந்தொகை ஆயுதங்களும் வெடி மருந்துகளும் வந்து சேர்ந்ததாக ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: இம்மாத முறபகுதியில் விடுதலைப்புலிகளுக்கு ஒரு கப்பலில் ஆயுதங்களும் வெடி மருந்துகளும் வந்து சேர்ந்துள்ளன. இதற்கு முன்பும் கிராண்பாஸ் குண்டு வெடிப்பு நடைபெற்ற தினத்திலும் ஆயுதங்களும், வெடி மருந்துகளும் வநது சேர்ந்துள்ளன.

இந்த ஆயுதக்கப்பல் மட்டக்களப்பு பகுதிக்கு வந்துள்ளது. கடற்படையினரின் தீவிர ரோந்து இருந்த போதும் ஒருவாறு புலிகள் சமாளித்து தமது ஆயுதக் கப்பலை இலங்கைக் கடற்பகுதிக்குள் கொண்டு வந்து சிறிய படகுகள் மூலம் கடற்புலிகள் ஆயுதங்களை தரையிறக்கியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். சி

# திருமலை கப்பல் தகர்ப்பினுல் ரூ.300மில்லியன்சொத்திழப்பு

[கொழும்பு]

கட்டுமுறிவு தாக்குதல், திருகோணமலையில் கடற்படைக் கப்பல்கள் தகர்ப்பு தொடர்பாக இராணுவச் செய்தியாளர்கள் பலபுதிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 19ம் திகதியன்று விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளால் திருகோணமலைத் துறைமுகத்தில் வைத்துத் தகர்க்கப்பட்ட கப்பல்களில் ஒன்ருன ரணசுறு, 208.5 மில்லியன் ரூபாவுக்கு சீன அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

மற்றைய கப்பலான சூரையா 1972ல் சீன அரசினுல் அப்போனதய சிறிமா அரசுக்கு வழங்கப்பட்டதாகும்.

ரணசுறு, சூரையா கப்பல்கள் தகர்க்கப்பட்ட தினத்தன்று, திருகோணமலைத் துறைமுகத்தில் 150 மீற்றர் இடைவெளித் தூரத்தில் நின்றன. கடற் கரும்புலிகளின் தாக்குதலில் ரணசூறு, சூரையா ஆகிய இரு கப்பல்களும் அழிக்கப்பட்டன.

மேலும் ரணவிரு, ஜகத்தா ஆகிய இரு கப்பல்கள் குறிப்பிடத்தக்க அளவு சேதமாகின என்று இராணுவச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தாக்குதலில் சிறிலங்காப் படைக்கு ஏற்பட்ட மொத்தச் சொத்து இழப்பு 300 மில்லியன் ரூபாவாகும்.

இதனிடையே கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு கட்டுமுறிவு முகாம் தகர்ப்புத் தாக்குதலில் கொல்லப் பட்ட இராணுவத்தினரில் இருவர் லெப்டினன் தர அதிகாரிகளாவர். மூவர் கோப்ரல்கள். ஏழு பேர் வான்ஸ் கோப்ரல்கள் ஆவர்.

மேற்படி படையினர் சிறி

(5-ம் பக்கம் பார்க்க)

சிந்திய இரத்தமும் காயவில்லை – எங்கள்
சீற்றமும் இங்கே குறையவில்லை.
வேண்டிய சுதந்திரம் வாங்குமட்டும் –
உழைக்கும்
வர்க்கத்துக்கு என்றும் ஓய்வு இல்லை.

# யுத்தம்மீண்டும் ஆரம்பித்திருப்பது உதவிதேடல் நடவடிக்கையை பாதிக்குமா?

(லண்டன்)

ஜனாதிபதி சந்திரிகா பாரிஸ் சென்றுள்ளார். அங்கு உலக வங்கியின் தலைமையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முக்கியமான கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் திருமதி சந்திரிகா கலந்து கொள்வார் என பி.பி.சி. தெரிவித்தது.

இது பற்றி பி.பி.சி. மேலும் தெரிவிக்கையில்:

இன்று வியாழனும் நாளை வெள்ளியும் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்து விலக புலிகள் தீர்மானித்ததை அடுத்து எழுந்த நெருக்கடியை ஆராய முந்தைய பயணத்திட்டத்திற்கு மாறாக ஒரு நாள் தாமதித்தே திருமதி சந்திரிகா பாரிஸ் சென்றுள்ளார்.

உறுதியான பொருளாதார வளர்ச்சியை பேணுவதில் கடந்த சில ஆண்டுகளாக திணறிக்கொண்டிக்கும் இலங்கை அரசு வெளிநாட்டு உதவியை தேடிக்கொண்டிருக்கும் இந்நிலையிலே நாட்டில் யுத்தம் மீண்டும் ஆரம்பித்திருப்பது நாட்டில் உதவி தேடல் நடவடிக்கையை பாதிக்குமா என்பதே இன்றைய கேள்வி.

புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து விலகுவதாக அறிவித்தபோது ஏன் அவர்கள் அவ்வாறு விலகுகிறார்கள் என்பது எவருக்குமே சரியாக தெரியாது. இலங்கை அரசுக்கு மேலதிக உதவி உத்தரவாதங்கள் கிடைப்பதை தடுப்பது ஒரு நோக்கமாக இருந்திருக்கலாம் என்பது ஒரு கருத்து. காரணம் அதனை தடுத்துவிட்டால் இராணுவ செலவீனங்களுக்காக உள்ளூர் வருவாயை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே வெளிநாட்டு உதவியை தடுப்பதன் மூலம் அரசை ஒரு நெருக்கடிக்குள் தள்ளலாமென புலிகள் கருதியிருக்கலாம். பாரிஸில் நடைபெறும் உதவி மாநாடென்பது உதவி புரியும் நாடுகள் புதிய உதவி உத்தரவாதம் வழங்க நடக்கும் ஒரு கூட்டமல்ல. இது ஒரு திடீர் நிகழ்ச்சியல்ல தொடர்ந்து நிகழ்வது. இருபக்கமும் கலந்து பேசி முடிவு செய்யும் ஒரு நிகழ்ச்சி.

இந்தச் சந்திப்பு ஒரு போலியான நிகழ்ச்சியே. இங்கு உலக வங்கி தனது அக்கறையை வெளிப்படையாக கூறும். உதவி பெறும் நாடும் தனது எதிர்காலத் திட்டத்தை விளக்கும். இந்த பாரிஸ் மாநாட்டில் ஒரு செப்புக் காசு பெறுமதியான மாற்றத்தைதானும், மீண்டும் வடக்கு - கிழக்கில் ஆரம்பமாகியுள்ள யுத்தம் கொண்டு வரமாட்டாது. உதவி வழங்கும் நாடுகள் உதவி வழங்க ஏற்கனவே தீர்மானித்துவிட்டன. அதாவது சமாதானத் தீர்வு உடனடியாக வரப்போகிறது எனத் தெரிந்தாலல்லாமல வடக்கை புனர்நிர்மாணம் செய்ய மேலதிக நிதியுதவி வழங்கப்படமாட்டாதென்று ஆகவே சமாதான முயற்சி உயிர்பெற்று நின்றாலென்ன செத்து மடிந்தாலென்ன இறுதியாக உறுதியளிக்கப்படப் போகும் தொகை ஏறத்தாழ 800 மில்லியன் டொலராகவே இருக்கும்.

இந்தத் தொகை 1991ல் உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு வழங்கிய நிதியுதவியை விட சிறிது குறைவாக இருக்கும். ஏற்கனவே கொழும்பிலுள்ள உலக வங்கி பிரதிநிதியின் கருத்துப்படி, இன்று நிலவும் அனைத்துலக நிலவரப்படி இலங்கைக்கு உறுதியளிக்கப்பட்டிருப்பதோ மிகப் பெரிய தொகையாகும், மறுபுறம் இலங்கை அரசு இந்த பாரிஸ் சந்திப்புக்களை. தான் கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமாக கருதப் போகிறது. ஆனால் அது ஓரளவே உண்மை.

உதவி வழங்கும் நாடுகள் பொ.ச.மு. அரசு மீது கரிசனை காட்டுவதற்கு பல காரணங்களுண்டு. மனித உரிமை மீறல் தொடர்பான அங்கலாய்ப்பு இப்போது இலை. இனி அமைதியை கொண்டு வருவது எவ்வளவு கடினமாயிருந்தாலும் முழுமனதாக தாம் அதில் ஈடுபடப்போவதாக சந்திரிகா கூறியிருப்பது உதவி வழங்கும் நாடுகளின் முழு ஆதரவைப் பெற்றுள்ளது. இருந்தபோதிலும் அரசின் பொருளாதாரச சாதனைகள் குறித்து உதவிவழங்குப் நாடுகள் பலவற்றுக்கும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பொ. ச. மு. அரசு பதவிக்கு வந்தபின் அது கடைப்பிடிக்கும திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கை பெருமளவு ஆரவாரத்துடன் வரவேற்கப்படுகிறது. ஆனால் கொள்கைக்கும் நடைமுறைக்குமிடையே இடைவெளி அகன்று அகன்று செல்வதால் மன அங்கலாய்ப்பை தோற்றுவிக்காமலும் இல்லை. அங்கலாய்ப்பு அச்சத்தை தருவதென்றால் கொடூரத்தனம் மிக்க தொழிற்சங்கங்கள்' முரண்பாடான போக்குகள் காட்டும் அமைச்சர்கள், தீர்மானம் மேற்கொள்வதில் சோம்பேறித்தனத் தாமதம், திருப்திகரமற்றவேலை ஒப்பந்த ஒப்படைப்புக்கள், தனியார் மயப்படுத்தல் நடவடிக்கையில் அரசு தீர்மானித்திருக்கும் கொள்கையிலிருந்து அது பின்வாங்கலாம் என்ற அச்ச உணர்வு இவையெல்லாம் ஒரு பின்னடைவாகவே கருதப்படுகிறது.

இவற்றைப்பார்க்கும் போது ஏமாற்றமே மலைபோல் குவிகிறது. உள்நாட்டு கடன்பற்று அதிகரிக்கிறது. வர்த்தகபற்றுக்குறை வர வர அதிகரிக்கிறது. பண வீக்கம் கூட கட்டுப்படியாகாத உதவு தொகைகளாலே கீழ்நிலைக்கு சென்றுள்ளது. 1990ன் ஆரம்பங்களில் ஏதோவொரு செல்வச் செழிப்புவந்தது உண்மைதான். ஆனால் தற்போது நிலைமை மோசமடைகிறது.

இந்நிலையிலே சந்திரிகா [illegible] செல்கிறார். அங்கு உதவி வழங்கும் நாடுகள் ஒன்று கூடும் ஒரு காட்சிக் கூடத்தில் தாமும்கூடிநிற்பதில் பெருமை கொள்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. சி-ரி

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக வெளிநாட்டுத் தமிழர்பிரசாரம்

## அரசு கடும் சினம்

(லண்டன்)

மீண்டும் யுத்தம் தொடங்கியதை அடுத்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பெரும் பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர் சங்கங்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டிலிருந்து புலிகள் விலகிக் கொண்டது பற்றி நியாயப்படுத்தி இந்த பிரசாரம் அமைந்துள்ளது

வெளிநாட்டு தமிழர்களின் இந்த நடவடிக்கை சிறிலங்கா அரசுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இப்பிரசாரத்துக்கு எதிராக அரசு அறிக்கை யொன்றை வெளியிட்டு புலிகளுடனான சமாதானப்பேச்சு வார்த்தையில் தமது நிலைப்பாடு குறித்து நியாயப்படுத்தி அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளது.-ரி

### தென் கொரியா வழங்கிய

# பத்துக் கோடி ரூபா செலவுக்கான கணக்குகள் எதுவும் அரசிடம் இல்லை

## ரகசிய பொலிஸ் தீவிர விசாரணை

(கொழும்பு)

தென் கொரியாவிலிருந்து இலங்கைக்கு உதவியாகக் கிடைத்த 10 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்று தெரியாதிருக்கின்றது என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

1977ம் ஆண்டுமுதல் 1989ம் ஆண்டு வரை தென்கொரியாவிலிருந்து வெளிநாட்டமைச்சுக்கு கிடைத்த 10 கோடி ரூபா செலவுபற்றி எந்தவித ஆவணங்களோ. அதுபற்றி தகவல்களோ இல்லை. அந்த முறைகேடு பற்றி இரகசியப் பொலிசார்தீவிர விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றார்கள்.

வெளிநாட்டு அமைச்சுக்கு வாகனங்கள் கொள்முதலீடு செய்வதற்கு 1977ம் ஆண்டு 1,00,000 அமெரிக்க டொலர் உதவி கிடைத்ததில் 40,000 டொலருக்கு தென்கொரியாவிலிருந்துவாகனங்கள் பெற்றுக் கொண்டதாகவும்மிகுதி60 000 அமெரிக்க டொலருக்கு என்ன நடந்தது என்று தெரியாதுள்ளது என்று 'லங்காதீப' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ம-ரி)

# மூன்று மாதங்களில் 7 ஆயிரம் அடையாளஅட்டை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆள் பதிவுத் திணைக்களத்தினால் சென்ற மூன்று மாதங்களில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட ஆட் பதிவுத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சென்ற ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் 31ம் திகதிவரையிலான மூன்று மாதப் பகுதியில் பொதுமக்களிடமிருந்தும், பாடசாலை மாணவர்களிடமிருந்தும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்கள் எமது திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன.

இந்த விண்ணப்பங்கள் யாவும் உடனுக்குடன் சரிபார்க்கப்பட்டு கொழும்பு ஆள்

(5ம் பக்கம் பார்க்க)

### 4 மாகாணங்களில்

# காணாமல் போனவர்கள் பற்றி 11 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் ஊவாமாகாணம் ஆகியவற்றில் கடந்த காலங்களில் ஆட்கள் காணாமல்போனது பற்றி விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவுக்கு பதினோராயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

1988ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் இந்த குறிப்பிட்ட மாகாணங்களில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்கும் பொறுப்பு இந்த 'ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு இவ்ஆண்டு ஜனவரி மாதம 10ம் திகதி தொடக்கம் மனுக்களை ஏற்கத் தொடங்கியது.பலமுறைப்பாடுகள் தொடர்பாக ஏற்கலவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

தற்சமயம் அனுராதபுரத்திலிருந்து கிடைக்கப்பட்ட மனுக்கள் பற்றி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது.

இம்மாதம் 28ம் திகதி வரை இந்த விசாரணை தொடரும். நூற்றுக்கும் அதிகமான மனுக்கள் பற்றிய விசாரணைகள் ஏற்கனவே முடிந்துள்ளன.

இதனை அடிப்படையாக வைத்து பூர்வாங்க அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். ஆணைக்குழுவுக்கு இன்னமும் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அவைபற்றி விசாரணை நடத்தப்படும் என்றும் அதிகாரிஒருவர் தெரிவித்தார். (ரி)

# தமிழக ஆளுநரை திருப்பி அழைக்கக் கோரிக்கை

(சென்னை)

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியை மத்திய அரசு திருப்பி அழைக்க வேண்டும் எனக் கோரி அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப் பேரவை முன்னர் அமர்ந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு மீது ஆளுநர் பகைமை போக்கை கொண்டிருப்பதால் அவரை உடனடியாக மீள அழைக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனராம். -ஆ

# சென்னாரெட்டிக்கு எதிராக அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

தமிழக அரசை சீர்குலைப்பதற்கு ஆளுநர் சென்னாரெட்டி தமது அதிகாரத்தை தவறாகப் பயன்படுவதாகவும். அவரை மத்திய அரசு திருப்பி அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து புதுடில்லியில் நாடாளுமன்ற கட்டடத்தின் முன்பாகஅ. தி. மு. க உறுப்பினர்கள் நேற்று முன்தினம்ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஒருமணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமிழக ஆளுநருக்கும், மத்திய அரசுக்கும் எதிராக அவர்கள் கோஷம் எழுப்பினர்.

இதேவேளை செல்வி ஜெயலலிதா அரசு பதவி நீக்கம் செய்யப்படவேண்டு மென்றும் கோரிபுதுடில்லியில் நேற்றுமுன்தினம் ஜனதாக்கட்சியினரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.-ரி

# லொறி கிணற்றில் வீழ்ந்து 29 பேர் உயிரிழப்பு!

## சென்னையில் சம்பவம்

(சென்னை)

சென்னை பெரியார் மாவட்டத்தில் லொறி ஒன்று கிணற்றில் விழுந்ததால் குறைந்தது 29 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மண்டாபுரம என்னும் கிராமத்தில் இந்த லொறி சென்று கொண்டிருந்தபோது சாலை திருப்பமொன்றில் சாரதி தனது கட்டுப்பாட்டை இழந்ததினல் லொறி கிணற்றில் விழுந்தது உடனடியாக ஊரவர்களினுல் 45 பேர் காப்பாற்றப்பட்டனர். இவர்களில் 11 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

70 அடி ஆழமுள்ள இந்தக் கிணற்றிலிருந்து மீட்பு வேலைகள் தாமதமாகி வருகின்றன. இதுவரை 16 பெண்களின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. -ம-ரி

# அரசியல் தலைவர்களுக்கான பாதுகாப்பு போதுமானதல்ல

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு போதுமானதல்ல என 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்; படையினருக்கு எதிரான விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு போதுமானதாயில்லை என பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

தெற்கில் அரசியல் தலைவர்களது பெயர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ளது இத்தலைவர்களை தாக்குவதன் மூலம் தெற்கின் ஸ்திரத்தன்மையை குலையச் செய்யலாமென அவர்கள் கருதுகிறார்கள். ஏற்கனவே பல தலைவர்கள் சொல்லப்பட்டு விட்டனர்.

எனவே அரசியல் தலைவர்களுக்கான மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அரசியல் தலைவர்களுக்கு குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க உட்பட பலருக்கும் வழங்கப்படும் பாதுகாப்பில் எவருக்கும் திருப்தியில்லை,

இந்நிலையில் முக்கிய புள்ளிகளின் வீடுகளுக்கு அருகாமையில் நடமாடியதாக பல புலிகள் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனினும் என்ன நோக்கத்திற்காக இங்கு வந்தார்கள் என்பதை கண்டிபிடிக்க புலனுய்வு துறையினர் தவறிவிட்டனர்.

மோதல்தவிர்ப்பு காலத்தில் தெற்கில் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்த தளர்வை உடனடியாக நீக்கி பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சி

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு 3 டாக்டர்கள் நியமனம்

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மிக விரைவில் மூன்று புதிய டாக்டர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். இம்மூவரின் பெயர்களும், தற்பொழுது கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தின் மத்தியபணிப்பாளர் நாயகம் அலுவலகத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் திரு. சண்முகதாஸ் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தகவல் தருகையில்: நியமனம் பெற்று இங்கு வரவிருக்கும் இம்மூன்று புதிய டாக்டர்களும் தொடர்ச்சியாக ஒரு வருட காலம் பணி புரிந்தால், தாம் விரும்பும் இடத்திற்கு மாற்றலாகிச் செல்ல வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பிட்டார். 160

## மூன்று மாதங்களில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவ் விண்ணப்பங்கள் அனைத்தும் கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்விண்ணப்பங்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் யாவும் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டன; இந்த அடையாள அட்டைகள் அந்தந்தப் பகுதி பாடசாலை அதிபர்களுக்கும் பொது மக்களுக்கான அடையாள அட்டைகள் அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(162-ரி)

# 13 தமிழ் இளைஞர் மொனருகலயில் கைது

[கொழும்பு]

மொனருகல-பொத்துவில் வீதியிலவைத்து 13தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு இக்கைதுகள் இடம் பெற்றுள்ளன.

அப்பாறைப் பகுதியிலிருந்து இவர்கள் மாத்தறை நோக்கிச் செல்கையிலேயே வீதித் தடை புகமி வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனராம்.

இவர்கள் விரவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இவர்கள் அனைவரும் மொனருகல நீதிமன்றில் நிறுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சி

## பாரிஸில் நிற்கும்போது

# நாட்டு நிலைமைகள் குறித்து சந்திரிகாவுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

பாரிஸ் சென்றுள்ள ஜனுதிபதி சந்திரிகாவுக்கு நாட்டு நிலைமை அடிக்கடி அறிவிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரதூரமான சம்பவங்கள் ஏதும் நடைபெற்ருல் தமக்கு உடனடியாக அறிவிக்குமாறு ஜனுதிபதி சந்திரிகா ஜனுதிபதி செயலக அதிகாரிகளை பணித்துவிட்டே சென்றுள்ளார். இதையடுத்தே நாட்டு நிலைமை பற்றி அவருக்கு அடிக்கடி அறிவிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை பாரிஸ் மாநாட்டில் பெறப்படும் நிதி உதவியைக்கொண்டு உடனடியாக இராணுவத்தினரின் அவசர தேவைகளை பூர்த்திசெய்ய ஜனுதிபதி சந்திரிகா திட்டமிட்டுள்ளதாக கருதப்படுகிறது. இதற்கேற்பவே அவர் புலிகளுடன் அரசு மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடாத்த தயாராயிருப்பதாக கூறிவருகிறார் என அவதானிகள் கூறியுள்ளனர்.

பாரிஸ் மாநாட்டில் அவர் வட-கிழக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண திட்டங்கள் குறித்து பெரும்பாலும் பேச்சுக்கள் நடாத்தமாட்டார் என்றே கருதப்படுகிறதாம். ஏனெனில் வடக்கு - கிழக்கிற்கு என பெறப்படும் நிதியை யுத்தத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் பெரும் எதிர்ப்பு உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து வரலாம் எனவும் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாம். -சி

## தேர்தல் ஆட்சேப மனு

# சந்திரானந்த டி சில்வா நீதிமன்று வரவில்லை

(கொழும்பு)

யாழ். மாவட்ட தேர்தல் ஆட்சேபனை வழக்கில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்க அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த முதல் பிரதிவாதியான முன்னுள் தேர்தல் ஆணையாளரும் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான திரு. சந்திரானந்த டி சில்வா நீதிமன்றுக்கு வராததால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஜனுதிபதி சந்திரிகா கூட்டிய அவசர மாநாடொன்றில் கலந்துகொண்டதால் திரு. சந்திரானந்த டி சில்வா நீதிமன்றுக்கு சமூகமளிக்க முடியவில்லை என்று அவரது சாட்சியத்தை நெறிப்படுத்தவிருந்த பிரதி சொலிஸ்ரர் ஜெனரல் சில்வா தெரிவித்தார்

இந்நிலையில் திரு சந்திரானந்த டி சில்வாவின் சாட்சியம் அடுத்த மாதம் 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. -சி

## வானொலிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு பாவனையாளரும் தமது வீட்டுப்பாவனைக்கான /கொண்டுசெல்லக்கூடிய/ வாகனத்தில் இணைக்கப்பட்டுள்ள வானொலிப்பெட்டிகளுக்கான உத்தரவுப்பத்திரங்களை எதிர்வரும் 10-06-95 இற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்கள். உத்தரவுப் பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களுடன் அறிவுறுத்தல் விபரங்களை தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதியிலோ அல்லது பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களிலோ 10-05-95 முதல் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒவ்வொரு முதற்பெட்டிக்கும்ரூபா50/-வும்மேலதிக ஒவ்வொரு பெட்டிக்கும் ரூபா30/வும் அனுமதிக்கட்டணமாக அறவிடப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை தமிழீழ நிர்வாக சேவையிலேயோ அல்லது குறித்த உள்ளூராட்சி மன்றுகளிலேயோ ஒப்படைப்பதன் மூலம் உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். தமிழீழநிர்வாக சேவையில் ஒப்படைக்கப்படும் பூரணப்படுத்தப்பட்டபடிவங்களுக்கு உடனடியாகவும் உள்ளூராட்சி மன்றங்களில் ஒப்படைக்கப்படும் படிவங்களுக்கு இரு கிழமைக்குள்ளாகவும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப்பகுதியுடன் தொடர்புகொள்ளவும். (சி)

## திருமலைக்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா கொமாண்டோ றெஜிமென்டைச் சேர்ந்தவர்களாவர்

கட்டுமுறிவு முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவப் பட்டாலியனின் கோப்ரல்கள் இருவர். லான்ஸ் கோப்ரல் ஒன்பது பேர். இராணுவப் புலனுய்வுப் பிரிவைச் சேர்ந்த கோப்ரல் ஒருவரும் கட்டுமுறிவுத் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகள் தரத்தினராவர். ரி

## வடக்கு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மீண்டும் வெடித்திருக்கும் போரைத் தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்குவதற்கு இராணுவம் முடிவு செய்திருக்கின்றது.

ஆயுதங்கள் வாங்குவதன் மூலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தம்வசப்படுத்த இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகின்றது;

புதிய ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள் என நவீன ஆயுதங்களை வாங்க அரசு முடிவு செய்திருக்கின்றது. அரசு இந்த ஆண்டுக்கு மட்டுமே 1500 கோடிரூபாவை பாதுகாப்புக்கு ஒதுக்கியிருப்பதால் பெருமளவு ஆயுதங்கள் வாங்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் வடக்கு-கிழக்கில் படையினரின் பாரிய இராணுவ நடவடிக்கை ஜனுதிபதி சந்திரிகா பாரிஸிலிருந்து நாடு திரும்பிய பின் ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -ம-சி

## போதிய புள்ளிகள் பெருமையினுல்

# பல்கலைக் கழகம் புகமுடியாத மாணவர்க்கு விசேட அனுமதி

[கொழும்பு]

1993ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, போதிய புள்ளிகள் பெருத காரணத்தினுல் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு விசேட ஒதுக்கீட்டின் கீழ் பல்கலைக்கழக அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

1994/95 பல்கலைக்கழகக் கல்வியாண்டுக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைக்காத இத்தகையோர் தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, நாடகம் உட்பட பல்வேறு துறைகளில் பெற்ற சான்றிதழ்களுக்கு 10 புள்ளிகள் வரை வழங்கப்படுகின்றன.

ஏதேனும் ஒரு பீடத்துக்கு வெட்டுப் புள்ளிகள் 10க்குக் குறைவாகப் பெற்ற மாணவர்கள் தங்களது ஏனைய சான்றிதழ்களின் மூலம் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறமுடியும்.

எனினும் 1994/95ம் கல்வி ஆண்டில அனுமதி பெறுகின்ற மொத்த மாணவர்களில் ஒருசத வீதத்திற்குக் குறைவானவரே இதன்மூலம் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற முடியும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உயரதிகாரி வெரிவித்துள்ளார். (ம ரி)

## புலிகள் தாக்குதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையை ஏற்படுத்தும் பொறுப்பு புலிகளிடமே தற்போது உள்ளது. எனவே அவர்கள் படையினர் மீது மேற்கொள்ளும் தாக்குதலை நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தினுல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது குறித்து ஆராய்வோம்.

அரசு சமாதான முயற்சிகளிலிருந்து விலகிக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் சமாதானத்தையே விரும்புகிறது புலிகளே மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொண்டார்கள். அது மட்டுமல்ல அவர்கள் முன்னறிவிப்பின்றி தாக்குதல் நடாத்தினர். ஆகையால் பேச்சுக்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது புலிகளின் பொறுப்பே.

புலிகள் இயக்கம் மீது அரசு கொண்டிருந்த நம்பிக்கை புலிகளின் நடவடிக்கை காரணமாக சிதைந்துவிட்டது. அதனை அவர்கள் மீண்டும் கட்டியெழுப்பவேண்டுமெனவும் தெரிவித்தார். (சி)

## அலரிமாளிகையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு அமைச்சின் செயலர் திரு. சந்திரானந்த டி சில்வா மற்றும் படை அதிகாரிகள் இந்த அவசர மாநாட்டில கலந்து கொண்டனர்.

பாரிஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனுதிபதி நேற்று பாரிஸ் சென்றதால் இந்த பாதுகாப்பு மாநாட்டை அதற்கு முன் கூட்டி நிலைமைகளை ஆராய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, சி

# படை நடவடிக்கைக்கு பொறுப்பாக மே. ஜெனரல் செனிவிரத்ன நியமனம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பகுதியில் நடைபெறும் சகல இராணுவ நடவடிக்கைக்கும் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஏ எம். யு. செனிவ்ரத்னவை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்

இப்பகுதிகளில் மீண்டும் போர் வெடித்ததைத் தொடர்ந்து உடனடியாக கூட்டப்பட்ட பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டதுடன் இராணுவத்தின் தலைமைச் செயலகத்தின் நடவடிக்கை தலைமைச் செயலகமும் அநுராதபுரத்திற்கு உடனடியாக கொழும்பிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் செனிவிரத்ன இனிமேல் இங்கிருந்தே செயற்படுவார் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இவர் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகள் பற்றி திட்டமிடுவதுடன் அவற்றுக்கான சகல நடவடிக்கைகள்பற்றியும் திட்டமிடுவதுடன் அவற்றுக்கான சகல உத்தரவுகளையும் பிராந்திய தளபதிகளுக்கு வழங்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பதவி உயர்வு கிடைக்காத நிலையில் அடுத்த மாதமளவில் ஓய்வு பெறவுள்ளது படையினருக்கு பெரும் இழப்பாகுமெனவும் இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சி

# பாஸ்கரலிங்கத்திற்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கக் காலத்தில் இடம்பெற்ற மோசடி சம்பந்தமாக முன்னாள் நிதியமைச்சரின் செயலர் ஆர். பாஸ்கரலிங்கம் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜர் செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: ஹில்டன் ஹோட்டல் விவகாரத்தில் ஏற்பட்ட முறைகேடுகளுக்கே ஜனாதிபதி ஆணைக்குழு முன் பாஸ்கரலிங்கம் தோன்றவுள்ளார். 1500 பஸ்கள் கொள்வனவு சம்பவத்திலும் இவரது பெயர் அடிபட்டது என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இவர் லண்டனில் தங்கியிருப்பதும் தெரிந்ததே. ம-சி

# ஐ. தே. க. மே தின பேரணி கண்டியில் நடைபெறாது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி கண்டியில் நடாத்தவிருந்த மேதினக் கூட்டத்தை ரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது'

இந்த மேதினப் பேரணிக்கு பதிலாக அன்று கண்டியில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை நினைவுகூரும் சமய வைபவங்கள் நடைபெறவுள்ளதாக ஐ. தே. க. செயலர் காமினி அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே கண்டியில் நடைபெறவிருந்த ஐ. தே. க வின் மேதினப் பேரணி ரத்துச் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. சி

# படையினருக்கு உதவுவதாக தமிழ்க் குழுக்கள் அரசுக்கு உறுதி

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு அரசுடன் இணையுமாறு தமிழ் கட்சிகளுக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளது. இதேவேளை அரச படையினருக்கு போர் நடவடிக்கையில் உதவ தமிழ் குழுக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன,

சமாதானத்திற்கு எதிரான வர்களை தோற்கடிக்க மேற்கொள்ளும் அரசின் நடவடிக்கைக்காக தமிழ் கட்சிகள் தம்முடன் இணைந்து செயலாற்ற வேண்டுமெனவும் அரசு கேட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையில் தமிழ் குழுக்கள் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்குமென அவை மீண்டும் அரசிடம் உறுதியளித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கில் கடந்த கால போர் நடவடிக்கையின் போது இந்த தமிழ் குழுக்கள் அரச படையினருக்கு உதவி வந்ததுடன் தமிழ்மக்களுக்கு சொலொணாதுயர் கொடுத்ததும் தெரிந்ததே. -சி

## சகல படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மும் அவர்கள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் மேலும் படையினருக்கு எந்நேரத்திலும் உதவுவதற்காக குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அடுத்துவரும் தினங்களில் கிழக்கில பாரிய அளவில் மோதல்கள் வெடிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது (சி)

# 'மே' நாள் ஏற்பாடுகள் துரிதமடைகிறது

(யாழ்ப்பாணம்)

இன்றைய அரசியல் பின்னணியில் தமிழ் மக்களனைவரையும் தமது விடுதலை உணர்வுகளை வெளிக்கொணரும் எழுச்சி நாளாக இவ்வருடத்தைய மே நாள் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்யும் கருத்தரங்குகள், அரச திணைக்கள, கூட்டுறவு, கூட்டுத்தாபன, வங்கிகள் கல்விச் சமூகத்தினர், தனியார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் நடைபெறுகின்றன.

இக்கருத்தரங்குகளில் வெகுஜன அமைப்புகளின் பேச்சாளர்கள் கலந்துகொண்டு எமது தேச விடுதலையை உறுதிசெய்யும் எழுச்சி நாளாக மேநாளை கணித்து அனைத்து மக்களும் ஒருங்கிணைந்துகலந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றனர். அத்துடன் மக்களது உணர்வுகளை பிரதிபலிக்கும் வாசகங்களுடனான பதாதைகள், சுலோக அட்டைகள், சுவரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

சமகால நிகழ்வுகளையும். தமிழீழ மக்களது அபிலாசைகளை இனங்காட்டும் ஊர்திகளும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைக்கப்படுகின்றன. மே நாள் ஏற்பாடுகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட ஏற்பாட்டுக் குழுவின் மேற்பார்வையில் வெகுஜன எழுச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. -சி

## ஆளுநர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிடச் சென்று அங்கு தாமதித்துள்ளனர்.

அங்கு தாமதியாமல் வந்திருந்தால் திரு. காமினி பொன்சேகராவும் அவருடன் சென்ற உயர் அதிகாரிகளும் புலிகளின் தாக்குதலுக்குள்ளாகியிருப்பார்கள்எனினும் இத்தாக்குதலில் திரு காமினி பொன்சேகாவின் மெய்பாதுகாவலர்களான 5 பொலிசாரும் உயிரிழந்தனர். தாக்குதல் நடந்து சில நிமிடங்களில் காமினி அவ்விடத்துக்கு வந்துள்ளார்.

இவருடன் திருமலை அரச அதிபர் எஸ். டி. சந்திரதாஸ, திருமலை பொலிஸ் மா அதிபர் விமல் குணதிலக, மாகாணசபையின் செயலர் திரு. கணேசநாதன், திருமலை பொலிஸ் அதிகாரி ஆனந்த ஹெட்டியாச்சி ஆகியோரும் இவருடன் சென்று உயிர் தப்பியவர்களாவர். -சி

# அமெ. பாதுகாப்பு அதிகாரிகளை அமைச்சர் பீரிஸ் சந்தித்தார்

(வாஷிங்டன்)

மோதல் தவிர்ப்பு உடன்பாடு முடிவடைந்ததைத் தொடர்ந்து நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலை குறித்து அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும், அமெரிக்க இராஜாங்க அமைச்சு அதிகாரிகளுக்கும் விளக்கிக் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் தங்கியிருந்த அமைச்சர் பீரீஸ் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கியைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

அமெரிக்க தரப்புடனான இக் கலந்துரையாடலின் போது அமைச்சர் பீரிஸ் நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் எனக கூறிய அமெரிக்க அதிகாரிகள் மோதலை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டில் சுமுக நிலையை ஏற்படுத்துமாறும் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பீரிஸிடம் கேட்டுக்கொண்டனராம். -சி

# 'மே' தின பேரணியை தவிர்க்குமாறு கட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்து!

[கொழும்பு]

கொழும்பில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதால் மேதினப்பேரணியில் கலந்து கொள்ள வேண்டாமென அரசியல்கட்சித் தலைவர்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த பேரணிகளை தவிர்க்குமாறு அவர்கள் சுதந்திரக்கட்சி மற்றும் ஐ. தே, க. சிரேஷ்ட தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். மேலும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கான பாதுகாப்பும் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமது கட்சித் தலைவர்களின் பாதுகாப்பு கருதி தாங்கள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளதாகவும் ஐ. தே. க. மேதினப் பேரணியில் கட்சித்தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா கலந்து கொள்வாரா என்பது குறித்து எதுவும் தெரியவில்லையென கட்சித்தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்,

மேலும் வடக்கு-கிழக்குயுத்தத்தால் கொழும்பின பாதுகாப்பு குறித்து தாங்கள் அக்கறை கொண்டுள்ளதாகவும் அந்த தலைவர் கூறியுள்ளார். (சி)

# மண்டைதீவுக் கடலில் 3 மீனவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவை அண்டிய கடற்பகுதியில் தொழிலுக்குச் சென்ற மூன்று மீனவர்களை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமிரவு ஏழு மணியளவில் தொழிலுக்குச் சென்ற இவர்கள் நேற்று மாலை வரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் படையினரின் தாக்குதலுக்குள்ளாகியிருக்கலாம் அல்லது கைது செய்யப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த புதன்கிழமை முதல் வடமராட்சி கடற்பகுதி உட்பட்ட கடற் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயுமுள்ளனர். - சி

## போர் என்றால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போரிடவேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு அரசு பல திட்டங்களை வைத்துள்ளது. கூடிய விரைவில் அரசு இச்சலுகைகளையும் திட்டங்களையுங் அறிவிக்கும்:

இறுதியான ஓர் அமைதி உடன்படிக்கை சாத்தியமில்லை என நான் நிராகரிக்கவில்லை. கடந்த செவ்வாய் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் எனக்கு நம்பிக்கை கிடையாது. மோதல் மீளத் தொடங்கியிருப்பது ஒரு தற்காலிக பின்னடைவே.

புலிகள் என்றுமே அமைதியை விரும்பியவர்களாக இருக்கவில்லை என்பதை நான் இப்போது நம்பத் தொடங்கியுள்ளேன். புலிகள் வசமுள்ள பகுதிகளில் இராணுவக் காரணங்களுக்காக பொருளாதாரத் தடை மீளவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் போது தமிழ்மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மையே.

தடைப் பட்டியலில் இல்லாத தடை நீக்கப்பட்ட பொருட்களைக் கூட இராணுவம் வடபகுதிக்குள் அனுமதிக்குமா என்பதற்கு உத்தரவாதமளிக்க முடியாதிருக்கும் எனவும் கூறினார். -ரி-சி

## நிர்வாக சேவை செயலகம் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையின் வன்னி, முல்லை மன்னார் மாவட்டங்களின் பொறுப்பாளர் திரு. ஈசனின் வீரச்சாவை யொட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழீழ நிர்வாக சேவைச் செயலகம் இன்றும் நாளையும் (27ம் 28ம் திகதிகள்) மூடப்பட்டிருக்கும் என தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். சி

## யாழ்ப்பாணம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விமானப் படையின் வான் தாக்குதலை எதிர்கொள்வதற்காக இரகசியமாக போர் விமானங்களை விடுதலைப் புலிகள் வாங்க முயற்சிக்கக்கூடும் அல்லது வாங்கியிருக்கக்கூடும்.

புலிகள் தமது கடற்புலி அமைப்பை பலப்படுத்திவரும் அதே வேளை யாழ்ப்பாணம் நோக்கி இராணுவம் தனது இறுதித் தாக்குதலை தொடங்கும் போது, தமது 'வான்புலி அமைப்பை' அறிமுகம் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விமானதாக்குதல் அதிகரிப்பு

[கொழும்பு]

திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்தும் தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கின்றன என்று 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

மன்னார் கடற்கரைப் பகுதியில் இராணுவம் கடந்த 72 மணி நேரம் நடாத்திய குண்டு வீச்சில் பொதுமக்கள் சிலர் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது,

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.